**முக்கிய வார்த்தைகள்:**
*கொள்கை*
*ஷரீஆ*
*பின்பற்றுதல் / தழுவுதல்*
*எளிதான*
*விறைப்பான*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**27 மே 2026 / 10 துல்ஹஜ் ஹிஜ்ரி 1447**

# வணக்க, வழிபாட்டுச் செயல்களின் பின்னணியில் உள்ள தத்துவத்தை அறிதல்

**اللّٰه أكبرُ، اللّٰه أكبرُ، اللّٰه أكبرُ،**

**اللّٰه أكبرُ، اللّٰه أكبرُ، اللّٰه أكبرُ،**

**اللّٰه أكبرُ، اللّٰه أكبرُ، اللّٰه أكبرُ،**

**اللهُ أَكْبَرُ مَا تَقَرَّبَ العَبْدُ بِقُرْبَان**

**اللهُ أَكْبَرُ مَا رَغِبَ العَابِدُونَ فِي الغُفْرَان**

**اللهُ أَكْبَرُ مَا حَمِدَهُ الإِنْسُ وَالجَانّ**

**الله أَكْبَرُ مَا جرَت الكَوَاكِبُ بِحُسْبَان**

**اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ**

**لاَ إِلَهَ إِلَّا اللهُ وَاللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ وَللهِ الحَمْدُ**

**اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي خصَّ بِالحَجِّ ذَا الحِجَّةِ، وَحطَّ الذُّنُوبَ عمَّن قَصَدَ فِيهِ الْبَيْتَ الحَرَامَ وَحجَّهُ، وَعَظَّمَ الأَجْرَ لِمَنْ أَظهَرَ فِيهِ التَّكبِيْرَ وَعَجَّهُ، وَأَشْهَدُ أَن لا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لا شَرِيكَ لَهُ، وَأَشهَدُ أَنَّ سَيِّدَنا مُحَمَّدًا عَبدُهُ وَرَسُولُهُ**

الَّذِي كَسَاهُ مِنْ حُلَلِ النُّبُوَّةِ وَالْبَهْجَةِ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ مَا حَمَلَ سَحَابٌ مَاءً وَمَجَّهُ.

أَمَّا بعدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ. قَالَ تَعَالَى: يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**அருள்மிக்க முஸ்லிம்களே!**

எல்லாப் புகழும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கே உரித்தாகுக! அந்த அல்லாஹ் தான், ஈமான் [ஓரிறை நம்பிக்கை], இஸ்லாமிய மார்க்கம் ஆகிய அருட்கொடைகளை நமக்கு வழங்கியுள்ளான்; நமது மார்க்கத்தின் மற்றொரு சிறப்புமிக்க தினமாகிய *"ஈதுல் அள்ஹா"* ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் நம்மையெல்லாம் ஒன்று சேர்த்த அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கே நாம் அனைவரும் நன்றி செலுத்துகிறோம். இந்த நாள் நன்மை செய்வதன் பால் நம்மை ஆர்வமூட்டுவதாக அமையட்டுமாக! பிரபஞ்சத்தின் அதிபதியாகிய அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது பக்தியை உறுதியாக்கட்டுமாக!

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ
اللهُ أَكْبَرُ وَللهِ الْحَمْدُ

நேற்றுதான், சிங்கப்பூரின் ஹஜ் பயணிகள் முதற்கொண்டு, உலகின் மில்லியன் கணக்கான முஸ்லிம்கள் இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகிய ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்காக *அர:ஃபா* மைதானத்தில் ஒன்று கூடினார்கள்.

துல்ஹஜ் மாதத்தின் 10-வது தினத்தில், *அர∴பா* மைதானத்தில், *"குத்பா ஹஜ்ஜதுல் வதா"* எனப்படும் இறுதி ஹஜ்ஜுப் பேருரையை இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நிகழ்த்தினார்கள். மேலும் அங்குதான், திருக்குர்ஆனின் "அல்-மாயிதா" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 3-வது வசனம் அருளப்பட்டது. அல்லாஹ் கூறுகிறான்:

ٱلْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِى وَرَضِيتُ لَكُمُ ٱلْإِسْلَٰمَ دِينًا ۚ

பொருள்: *"இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தைப் பரிபூரணமாக்கி விட்டேன்; மேலும் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக இஸ்லாம் மார்க்கத்தையே [இசைவானதாகத்] தேர்ந்தெடுத்துள்ளேன்"*

இஸ்லாத்தின் முதல் கடமையாகிய *கலிமா ஷஹாதத்* முதற்கொண்டு, ஐங்காலக் கட்டாயக் கடமையானத் தொழுகைகள், ரமதான் மாதத்தின் நோன்பு, கட்டாயமாகச் செலுத்த வேண்டிய ஜகாத் ஆகியவற்றுடன் ஹஜ்ஜுக் கடமையையும் பரிபூரணமாக வழங்கிய பின், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் சமுதாய மக்களுக்கு இஸ்லாமிய மார்க்கம் பரிபூரணமாக வழங்கப்பட்டு விட்டது என அல்லாஹ் கூறுகிறான்.

"இஸ்லாமிய மார்க்கம் பரிபூணமாக்கப்பட்டு விட்டது" என மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கு, இமாம் பைளாவி [ரஹ்], இமாம் இப்னு ஆஷூர் [ரஹ்], இமாம் ஷாதுபீ [ரஹ்] ஆகிய திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் விளக்கமளிக்கையில்: சர்வதேசக் **கொள்கைகள்** [*குல்லியத்*] விஷயத்திலும், வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தில் மனிதகுலத்துக்கு வழிகாட்டுவதிலும் இஸ்லாம் பரிபூரணமாக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இஸ்லாம், **கொள்கைகளையும்**, மதிப்பீடுகளையும், எது கூடும், எது கூடாது எனத் தீர்மானிக்கும் மார்க்கத்தின் அடிப்படை விஷயங்களையும் அறிமுகம்

செய்துள்ளது; அவை எல்லாக் காலத்துக்கும் பொருந்துபவையாக உள்ளன; இதுதான், *"அக்மல்து லகும் தீனகும்"* எனும் அல்லாஹ்வின் வார்த்தைகளின் பொருளாகும். **ஷரீஅத்தில்** காணப்படும் அப்பரிபூரணத்துவம் அசைவற்றதாகவோ அல்லது **கடினமானதாகவோ** இல்லை. **கொள்கைகள்**, மதிப்பீடுகள் மற்றும் அடிப்படைத் தீர்ப்புகள் ஆகிவற்றின் வடிவில் காணப்படும் அப்பரிபூரணத்துவம், முஸ்லிம்கள் எங்கிருந்தாலும், எக்காலத்தில் இருந்தாலும் அவற்றைப் புரிந்து, பரிபூரண நம்பிக்கையுடன் வாழ்க்கையைச் செலுத்துவதற்கான ஆற்றலை அவர்களுக்கு வழங்குகிறது.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ
اللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே**!

இஸ்லாமியப் போதனைகளின் நிலைத்தன்மையையும், செயல் திறனையும் உறுதி செய்யும் **கொள்கைகள்** மற்றும் மதிப்பீடுகளில், கருணை மற்றும் **எளிமை** என்பவை முதன்மையான அம்சங்களாக உள்ளன. இதற்குக் காரணம், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, தனது அடியார்கள் பல காலங்களில் எதிர்கொள்ளும் சவால்கள், மாறுபடும் சூழ்நிலைகள் மற்றும் வரம்புகளை முழுமையாக அறிந்தவனாக இருக்கின்றான். எனவே, **ஷரீஆ**, மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தும் வகையில் அறிமுகம் செய்யப்படவில்லை; பரிபூரணமான ஞானம், சமநிலை, இலகு மற்றும் **எளிமையுடன்** அல்லாஹ்வின் பக்கம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு வழிகாட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-ஹஜ்" எனும் அத்தியாயத்தின் 78-வது வசனத்தில் பின்வருமாறு நமக்கு நினைவூட்டுகின்றான்:

هُوَ ٱجْتَبَىٰكُمْ وَمَا جَعَلَ عَلَيْكُمْ فِى ٱلدِّينِ مِنْ حَرَجٍ

பொருள்: *"[முஃமின்களே!] அவன் [அல்லாஹ்] உங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்; [இஸ்லாம் எனும்] இந்த மார்க்கத்தில், அவன் உங்களுக்கு எந்தச் சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை"*

திருக்குர்ஆனின் மற்றொரு அத்தியாயம் "அல்-பகரா" என்பதின் 185-வது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

يُرِيدُ ٱللَّهُ بِكُمُ ٱلْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ ٱلْعُسْرَ

பொருள்: *"அல்லாஹ் உங்களுக்கு **இலகுவானதை** நாடுகிறானே தவிர, உங்களுக்குச் சிரமமானதை அவன் நாடவில்லை"*

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

**إِنَّ هَذَا الدِّينَ يُسْرٌ، وَلَنْ يُشَادَّ الدِّينَ أَحَدٌ إِلَّا غَلَبَهُ.**

பொருள்: *" நிச்சயமாக, இந்த மார்க்கம் மிகவும் **இலகுவானதாகும்;** எவராவதொருவர், இந்த மார்க்கத்தைத் தன் மீது கஷ்டமாக்கிக் கொண்டால் அது அவரை மிகைத்து விடும்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அந்-நஸாயீ ரஹ்]

மற்றொரு ஹதீதில்:

"இறைத்தூதர்[ஸல்] அவர்களிடம் இரண்டு விஷயங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு கூறப்பட்டால், அவற்றில் எது **இலகுவானதோ** அதனைத் தான் தேர்ந்தெடுப்பார்கள்; அவ்விஷயம் பாவத்துக்குக் காரணமாக இல்லாமல் இருக்கும் போது அதனைத் தான் தேர்ந்தெடுப்பார்கள்" என

விளக்கப்பட்டுள்ளது. [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**
இதைத் தான், ஹஜ்ஜுக் கடமையின் விஷயத்திலும் நாம் காணலாம்; மில்லியன் கணக்கான மக்கள், நீண்ட நாட்களாக, மிகவும் சவால்மிக்க தட்ப வெப்ப சூழ்நிலையில் நிறைவேற்றும் ஒரு கடமை தான் ஹஜ்ஜுக் கடமையாகும். கருணைச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டுள்ள இம்மார்க்கம், தன்னைப் பின்பற்றுபவர்கள் கடுந்துயரங்களையும் கஷ்டங்களையும் எதிர்கொள்ள வேண்டுமென, வேண்டுமென்றே விரும்புமா? இவையெல்லாம், வாழ்க்கையின் சோதனைகள் எனக் கருதி, அவர்கள் கஷ்டப்பட வேண்டுமென விரும்புமா? நிச்சயம் விரும்பாது.

ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிய தனது தோழர்கள் கஷ்டத்தை உணர்ந்த போதும், அவர்களிடம் ஒரு சில தவறுகள் நடைபெற்றதை அறிந்த போதும் அவர்களை நோக்கி:

افْعَلْ وَلَا حَرَجَ

பொருள்: *"அதைச் செய்யுங்கள்; அதில் தவறில்லை; [எவ்வித பாவமோ, தடையோ இல்லை]"* என இறைத்தூதர்[ஸல்] அவர்கள் கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

இக்காலத்தில், ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுபவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால், இக்கடமை மிகவும் ஒழுங்காக அமைக்கப் பட்டதாகவும், கடுமையான விதிமுறைகளுடன் நிர்வகிக்கப்படுவதாகவும் உள்ளது. ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுபவர்கள் மிகவும் பாதுகாப்பாகவும் ஒழுங்குமுறையுடனும் நிறைவேற்றுவதற்கு உதவுவதற்காக, நவீன, முன்னேற்றமான வழிமுறைகளும் சாதனங்களும்

பயன்படுத்தப்படுகின்றன. எனினும், இம்மாற்றங்கள் ஹஜ்ஜின் அடிப்படை இயல்பை மாற்றக் கூடியவையல்ல.

இவ்விஷயம், *குர்பானிச்* செயல் முதற்கொண்டு, இஸ்லாத்தின் மற்ற அனைத்து வணக்க வழிபாட்டுச் செயல்களிலும் பின்பற்றப்படுகிறது. உதாரணமாக, ஆரம்ப காலத்தில் குர்பானியின் சடங்கை உள்ளூர் சமுதாய மக்களிடையே நிறைவேற்றப்பட்டு, அதன் இறைச்சியை உள்ளூர் மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டு வந்ததென்றால், இன்று அதிகத் தேவையுள்ளவர்களுக்கு முக்கியத்துவமளிப்பதற்காகவும், கஷ்டமான சூழ்நிலையில் வாழ்பவர்களுக்கு உதவுவதற்காகவும் உலகின் பல பகுதிகளில் குர்பானியின் உணர்வுடன் இக்கடமை நிறைவேற்றப்படுகிறது.

மார்க்கப் போதனைகளை, அன்றாட வாழ்க்கைக்குத் தக்க நிறைவேற்றுவதும் "**ஷரீஆ**" வின் ஒரு பகுதியாகும். உண்மையில், எந்தவொரு குறிப்பிட்ட சூழலுக்கான தீர்ப்பும், வாழ்க்கையின் யதார்த்தங்களைக் கருத்தில் கொள்ளாமல், வெறும் பண்டைய கால நூல்கள் மற்றும் எழுத்துக்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கக் கூடாது என்று அறிஞர்கள் எச்சரித்துள்ளார்கள்.

கற்பனை செய்து பாருங்கள், **ஷரீஆ** ஒரேயொரு **விறைப்பான** மற்றும் குறுகிய வடிவத்திலான செயலாக்கத்துடன் அமைக்கப்பட்டிருந்தால், பல சூழ்நிலைகளில் வாழும் மக்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதிலும் தமது பக்தியை வெளிப்படுத்துவதிலும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டிருப்பார்கள். ஆனால், கிருபைமிக்க அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா, காலங்களும் சூழ்நிலைகளும் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும்; அடியார்கள் எதிர்கொள்ளும் சவால்களும் வித்தியாசமான வையாக இருக்கும் என்பதை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.

எனவே, **ஷரீஆ** விரிவானதாகவும், விரிந்து வளையும் தன்மை கொண்டதாகவும் உள்ளது. அத்தன்மைதான், வணக்க வழிபாட்டுச்

செயல்களை எல்லாச் சூழ்நிலைகளிலும் தொடர்ந்து நிறைவேற்ற முடிகின்ற வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ
اللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**
இன்று, மக்கள் இரண்டு தீவிரச் சிந்தனைகளில் ஒன்றில் அடிக்கடி விழுந்து விடுவதைக் காண்கிறோம்.

சிலர், *இ:ப்ராத்,* அதாவது, அளவுக்கு மீறிய, விறைப்பான, நெகிழ்வற்ற சிந்தனையுடன் காணப்படுகிறார்கள்; எந்தவித, சிறிய மாற்றத்தையும் கூட இவர்கள் **ஏற்றுக் கொள்வதில்லை**; மாறி வரும் சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறிக் கொள்வதற்கு, மார்க்கத்தில் அறவே இடமில்லை எனக் கருதுகிறார்கள். இப்படிப்பட்ட குறுகிய மனநிலையைப் பெற்றுள்ளவர்கள் **ஷரீஆ** வில் காணப்படும் விசாலமானச் சிந்தனையைக் கண்டு கொள்வதில்லை; அதனைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள்.

மற்ற சிலரிடம், மற்றொரு வகையான *"இ:ப்ராத்" [அளவுக்கு மீறிய நிலை]* காணப்படுகிறது. இவர்கள் மார்க்கத்தின் சட்டங்களை இழிவுபடுத்து கிறார்கள்; எந்த அளவுக்கெனில், அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலாவினால் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்களையும் தெளிவானக் **கொள்கைகளையும்** புறக்கணிக்கின்றார்கள். இவர்கள் தமது மனோ இச்சைகளைப் பின்பற்றுவதற்காக, தெளிவாகத் தடைசெய்யப்பட்டுள்ள விஷயங்களை அனுமதிக்க முயற்சிக்கின்றார்கள்; வலுவான அடிப்படை ஆதாரமின்றி அதனை நியாயப்படுத்தவும் முயற்சிக்கின்றார்கள். ஆனால், நமது மார்க்கமோ நடுநிலையானப் போக்கைக் கடைப்பிடிக்குமாறு கூறுகின்றது. அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 143-வது வசனத்தில் கூறுகிறான்:

وَكَذَٰلِكَ جَعَلْنَٰكُمْ أُمَّةً وَسَطًا لِّتَكُونُوا۟ شُهَدَآءَ عَلَى ٱلنَّاسِ
وَيَكُونَ ٱلرَّسُولُ عَلَيْكُمْ شَهِيدًا ۗ

பொருள்: *"இவ்வாறே, நாம் உங்களை ஒரு நடுநிலையான சமுதாயமாக ஆக்கியுள்ளோம்; [அப்படி ஆக்கியது], நீங்கள் மற்ற மனிதர்களுக்குச் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், [நம் தூதர்] முஹம்மது அவர்கள் உங்கள் செயல்களுக்கு சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும்"*

*"வஸதிய்யா"* அதாவது நடுநிலையானப் பாதை என்பதன் பொருள், மார்க்கத்தின் **கொள்கைகளை** விட்டுக் கொடுத்து விட அனுமதிக்கும் பாதை என்பதல்ல; *வஸதிய்யா* எனப்படும் நடுநிலையானப் போக்கு கூட மார்க்கத்தின் **கொள்கைகளில்** ஒன்றாகும். **ஷரீஆ** வின் பரிபூரணத்துவத்தை ஆழமாக அறிந்து கொள்வதன் மூலம் நடுநிலையானப் போக்கு நம்மிடம் உருவாகும்; தனது **கொள்கையில்** உறுதியாகவும் அதே சமயம் பயன்பாட்டில் பரந்து விரிந்து இருப்பதும் தான் **ஷரீஆ** ஆகும்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!
எந்த முஸ்லிம்கள், மார்க்கத்தை நன்கு அறிந்துள்ளார்களோ, அவர்களின் வாழ்க்கையில் சமநிலையானப் போக்கு இருப்பதைக் காணலாம். அப்படிப்பட்ட முஸ்லிம்கள் மார்க்கத்தைச் சுமையாகக் கருதமாட்டார்கள். மறுபுறம், மார்க்கத்தை அவர்கள் சாதாரணமானதாகக் கருதவும் மாட்டார்கள்; எவ்வித **கொள்கையும்** வழிகாட்டுதலும் இல்லாத மார்க்கம் என நினைக்கமாட்டார்கள். மாறாக, காலத்தின் மாற்றங்களை அவர்கள் எதிர்கொள்ளும் போது, வழிகாட்டும் ஒளிவிளக்காக அதனைக் காண்பார்கள்.

வணக்க வழிபாடுகள், பொருள்களைச் செலவழித்தல், அனுமதிக்கப்பட்ட உணவுகள் சம்பந்தமான விஷயங்கள், ஆகிய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் சமநிலையானப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென அல்லாஹ் நமக்குப் போதித்துள்ளான். நாம் தீவிரமானச் சிந்தனைகளில்

விழுந்து விடக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு அல்லாஹ் போதனை செய்கின்றான்.

இவ்விதமானப் புரிந்துணர்வின் அடிப்படையில், *"ஈதுல் அள்ஹா"* வானது, குர்பானியின் விரிவானப் பொருளை நமக்குப் போதிக்கின்றது. *குர்பானி* என்பது பிராணிகளை அறுத்துப் பலியிடுதல் என்பது மட்டுமல்ல, அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலாவின் வழிகாட்டுதலுக்கு நம்மை நாம் ஒப்படைக்கத் தயாராக இருக்க வேண்டுமென்பதும் அதன் பொருளாகும். சூழ்நிலைகளுக்குத் தக்க சில மாற்றங்களைத் தழுவ வேண்டிய அவசியம் ஏற்படும் போது கூட, நமது **கொள்கைகளை** விட்டுக் கொடுத்து விடாமல் நடந்து கொள்வது அவசியமாகும்.

இது சம்பந்தமாக மூன்று பாடங்கள் உள்ளன; அவற்றில் நாம் சிந்தனை செய்து, அவற்றைச் செயல்படுத்துவது அவசியமாகும்:

**முதலாவதாக: விரிவானப் புரிதலின் மூலம் மார்க்கத்தின் அறிவை ஆழமாகப் பெறுவது**

கல்வியறிவு என்பது, எது அனுமதிக்கப்பட்டது, எது தடைசெய்யப்பட் டுள்ளது என்பதைப் பற்றி மட்டும் அறிவதல்ல, மாறாக, ஒவ்வொரு சட்டத்தின் பின்னணியில் உள்ள நோக்கம் மற்றும் தத்துவத்தை அறிவதும் கல்வியறிவாகும். *"இது அனுமதிக்கப்பட்டுள்ளதா? அல்லது தடைசெய்யப்பட்டுள்ளதா?"* என்று கேட்பதையும் கடந்து, *இப்போதனைக்குப் பின்னணியில் உள்ள உயர்ந்த நோக்கம் [மகாஸித்] என்ன? இது எத்தகைய மதிப்பீடுகளைக் கொண்டுள்ளது? மார்க்கத்தின் தெளிவான நூல்களுக்கு முரண்படாமல் வாழ்க்கையின் யதார்த்த நிலையில் இதனை எப்படி செயல்படுத்துவது? குறிப்பிட்ட சூழ்நிலைகளை மதிப்பீடு செய்வதில் எவ்விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்?* என்பது போன்ற ஆழமான, விரிவான கேள்விகளைக் கேட்கவும் நாம் முயற்சிக்க வேண்டும்.

**இரண்டாவதாக: கல்வியறிவை அடிப்படையாகக் கொண்ட பின்பற்றுதலானது, "ஷரீஆ" உடைய அழகின் ஒரு பகுதியாகும்**

புதிய விஷயத்தைத் **தழுவுதல்** என்பது மார்க்கத்தின் பலஹீனம் அல்ல; மாறாக, அது அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் விரிவான கிருபையின் அடையாளமாகும். இந்த உண்மையைப் புரிந்து கொண்ட ஒரு சமுதாயம், காலத்தின் சவால்களை எதிர்கொள்வதில் அதிக நம்பிக்கையுள்ள, அமைதியான, சகிப்புத்தன்மை மிக்க சமுதாயமாக உருவாகும்.

**மூன்றாவதாக: குர்பானியின் பொருள் மற்றும் தத்துவத்தில் மனிதகுலத்துக்குப் பங்காற்ற வேண்டும் எனும் சிந்தனையும் காணப்பட வேண்டும்.**

முஸ்லிம்கள் தமக்காக மட்டும் வாழ்வது கூடாது; இன்று நாம் நிறைவேற்றும் தியாகச் செயல்கள், தனிப்பட்ட எல்லைகளையும் கடந்து, நம்மைச் சுற்றியுள்ள மனிதகுலம் அனைவருக்கும் சேவை செய்வதாக இருக்க வேண்டும். காலநிலை மாற்றங்கள், சமூகப் பதட்டங்கள், இஸ்லாத்தைப் பற்றிய தவறான புரிதல்கள் போன்ற சவால்கள் எதிர்கொள்ளப்படும் இவ்வுலகில், முஸ்லிம்கள், கிருபை, விவேகம் மற்றும் பிரச்சனைகளுக்கானத் தீர்வுகளாக உருவெடுக்க வேண்டும்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

"ஈதுல் அள்ஹா" வானது, இஸ்லாமிய மார்க்கம் தனது **கொள்கையில்** பரிபூரணமானது எனவும், விசாலமான கிருபைச் சிந்தனையைக் கொண்டது எனவும், சமநிலையான அணுகுமுறையைக் கொண்டது எனவும் நமக்கு நினைவூட்டுகிறது.

எனவே, மார்க்கத்தை நன்கு அறிந்த சமுதாயமாகவும், அதனைச் செயல்படுத்துவதில் நம்பிக்கையுள்ள சமுதாயமாகவும் ஆகுவதற்கு முயற்சிப்போமாக! ஓரிறை நம்பிக்கையாகிய ஈமானின் நிலைத் தன்மையைப் பெற்றுள்ள, மிகச் சிறந்த புரிந்துணர்வுடன் கூடிய, இஸ்லாத்தை அழகாகப் பிரதிபலிக்கும் நடத்தையைக் கொண்ட, அனைத்து படைப்புகளுக்கும் கிருபையாக அமைந்துள்ள நபர்களில் ஒருவராக

நம்மனைவரையும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா ஆக்கி, அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ**
**اللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ**

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

اللهُ أكبرُ، اللهُ أكبرُ، اللهُ أكبرُ،

اللهُ أكبرُ، اللهُ أكبرُ،

اللهُ أكبرُ، اللهُ أكبرُ

الْحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ الْعَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

**اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الْأَحْيَاءِ مِنهُم وَالْأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا الْبَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالْمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ الْبُلْدَانِ عَامَّةً، يَارَبَّ الْعَالَمِينَ.**

**اللَّهُمَّ إِنَّا نَسْتَوْدِعُكَ أَنْفُسَنَا وَأَهْلَنَا وَبِلَادَنَا، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِ الْمُفْسِدِينَ، وَكَيْدِ الْمُعْتَدِينَ، وَظُلْمِ الظَّالِمِينَ. اللَّهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُورِهِمْ، وَنَعُوذُ بِكَ مِنْ شُرُورِهِمْ. اللَّهُمَّ يَا مُنْزِلَ الْكِتَابِ، وَيَا مُجْرِيَ السَّحَابِ، وَيَا هَازِمَ الْأَحْزَابِ، اهْزِمِ الْأَحْزَابَ، وَانْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.**

**عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.**